# செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம்

செங்கல்பட்டு மறைமாவட்டம்




விழிப்போடு இருப்போம்... கொரோனாவை விரட்டுவோம்...

# கோவிட் -19 இரண்டாம் அலை

## செயல்பாட்டு அறிக்கை -ஓ ர் தொகுப்பு

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

## இயக்குநர் உரை....

**நண்பர்களே! உடன் பிறப்புகளே!! அனைவருக்கும் வணக்கம்!!!**



நாம் வாழும் இவ்வுலகம் அனைவருக்குமான ஓர் உலகம். இவ்வுலகில் அனைவருக்கும் வாழும் உரிமை உண்டு. அனைவரும் அனைத்து நிலைகளிலும் இணைந்து சேர்ந்து வளரவும், நிறைவடையவும் உரிமையுண்டு. நாம் அனைவரும் இணைந்து சேர்ந்து வளருகிறோம். ஒருவர் மற்றொருவருக்கு உதவியாக இருக்கிறோம், மற்றவரின் வளர்ச்சியில் அக்கரை காட்டுகிறோம். வளர்ந்த சமூகங்கள், முன்னேறிய சமூகங்கள் பின் தங்கிய சமூகங்களை, ஓரங்கட்டபட்ட சமூகங்களை விளிம்பு நிலை சமூகங்களை உயர்த்திட, முன்னேற்றிட கடமையுண்டு.

திருத்தந்தை பிரான்சிஸ் நம்மிடையே இருக்கும் அநீதி, ஏற்றத் தாழ்வுகள், வறுமை ஆகியவற்றிக்கு மனிதர்களிடையே சகோதரத்துவம், கூட்டுத் தோழமையும் இல்லாததுவுமே அடிப்படை காரணம் என்கிறார். யார் இறந்தால் எனக்கென்ன? யார் பிழைத்தால் எனக்கென்ன? தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்கின்ற மனநிலையில் வாழும் மக்களை அகில உலகம் முழுவதும் காணமுடிக்கின்றது. தன் கண்முன்பாக பலர் பாதிப்புகளுக்கு உள்ளாகினாலும், தான் மட்டும் பாதிக்கப்படவில்லை என்ற எண்ணம் உள்ளவர்களிடமிருந்து எத்தகைய சமூகச் சிந்தனையும், சமூக மாற்றங்களும், சமூக வளர்ச்சிகான காரணிகளும் எழுப்போவதில்லை. ஏழைகள், பெண்கள், தலித் மக்கள், சிறார்கள், பழங்குடி இனத்தவர் மற்றும் நலிவடைந்தோர் போன்றோர்களுக்கு எதிராக இவ்வுலகில் நிகழ்த்தப்படும் வன்கொடுமைகளை, ஏதோ இது அவர்களுக்கு மட்டும் உாயி பிரச்சனையாக கருதி கண்டும் காணாமல் செல்லும் மனிதர்கள் மத்தியில், இது நம் அனைவரின் பிரச்சனை, நமது சமுதாய பிரச்சனை என்று கருதி அனைவரும் சேர்ந்து ஒற்று சேர்ந்து அந்த பிரச்சனைக்கு எதிராக ஓர் அணியில் திறண்டு குரல் கொடுக்கும் போது தான் அத்தகைய பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியும்.

மனிதர்களின் தேவைகளுக்கு ஒருவர் மற்றவரைச் சார்ந்து வாழும் நிலை ஏற்படும் பொழுது ஏன் அவர்களுடைய பிரச்சனைகளில் நம்மால் சேர்ந்து நிற்க முடியவில்லை? ஏன் நம்மால் பிறருக்கு உதவ முடியவில்லை? ஏன் நம்மால் அவர்களை காப்பாற்ற முடியவில்லை? என்ற கேள்விகளை முன்வைத்து, அனைவருக்கும் நிறைவாழ்வு ஒன்றிணைந்த வளர்ச்சி, கூட்டுத் தோழமை போன்ற அறக் கோட்பாடுகளை கத்தோலிக்க திரு அவையின் போதனைகளில் காணமுடிகிறது. கொரோனா பெருந்தொற்று முதல் அலையில் ஏராளமான இழப்புகளையும், தொல்லைகளையும் சந்தித்தோம், கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலையில் சொல்ல முடியாத இழப்புகளையும், பிரச்சனைகளையும் சந்தித்துக் கொண்டு வாழ்கிறோம். இந்த இக்கட்டான சூழ்நிலையில் கத்தோலிக்க திரு அவை தன்னுடைய சமூக அக்கறையால் சமூக அறப்பணிகளால் நம்மை வலுவாக தாங்கியது என்று சொன்னால் அது மிகையாகாது. கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலையில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் வழியாக செங்கை மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு நீதிநாதன் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஏராளமான நலப்பணிகளை கூட்டுத் தோழமை உணர்வோடும், சகோதரத்துவ மனநிலையோடும் நல்ல உள்ளங்கள், தன்னார்வ தொண்டர்களின் உதவியோடு மேற்கொண்டோம். இதன் விரிவான தகவல்களை இக் கோவில் 19 இரண்டாம் அலை செயர்பட்டு அறிக்கையின் வழியாக உங்கள் அனைவருக்கும் பகிர்வது மிக்க மகிழ்ச்சி. இதன் மாபெரும் அறப்பணியில் உதவிய உங்கள் அனைவருக்கும் நன்றி. இன்னும் பெருந்தொற்று காலம் முடியவில்லை. விழிப்போடு இருப்போம் உயிர்களை காப்போம். இன்னும் பல உயர்களை காப்பாற்ற உடல் வலிமையையும், மன வலிமையையும், தோழமை உணர்வையும், தாராள உள்ளத்தையும் இறைவன் நம் அனைவருக்கும் தந்தருள்வாராக.

*விளிம்பு நிலை மக்களை மையத்திருக்கு அழைத்துவரும் பணியில்*

**இ. அந்தோணிராஜ், இயக்குநர்**

செங்கல்பட்டு கிராமப்பு மேம்பாட்டுச் சங்கம்.

# கோவிட் -19

## இரண்டாம் அலை

## செயல்பாடுகள்

### கொரோனா (கோவிட் -19)

கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொரோனா வைரஸ் எனப்படும் கோவிட்19 பெருந்தொற்றானது சீனாவின் வுஹான் நகரில் தோன்றி உலக நாடுகள் அனைத்திற்கும் பரவி பெருமளவில் உயிர்சேதத்தை ஏற்படுத்தியது. உலக நாடுகள் அனைத்திலும் நோய்த்தொற்றின் காரணமாக அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களும் மூடப்பட்டன. இதனால் பலகோடி மக்கள் வேலையை இழக்கும் அபாயம் ஏற்பட்டது. இதன்காரணமாக உலக நாடுகள் அனைத்தும் உயிர் சேதத்தையும், பெரும் பொருளாதார சரிவையும் சந்தித்தன. இச்சூழ்நிலையில் கொரோனாவின் தாக்கமானது இன்றளவும் இரண்டாம் அலையாக தொடர்ந்துக்கொண்டுதான் இருக்கின்றது.

### உலக சுகாதார அமைப்பு


2020 ஜனவரி 30 அன்று இத்தொற்று பரவலை ஒரு பொது சுகாதாரப் பன்னாட்டு அவசர நிலையாக உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவித்தது. இது 2009 ஆம்ஆண்டில் (H1N1) தொற்றுநோய்க்கு பின்னர் அறிவிக்கப்படுவது ஆறாவது முறையாகும்.

### கொரோனா – முதல் அலை

உலகை ஆட்டிபடைக்கும் கொரோனா பெருந்தொற்று உலகெங்கிலும் பரவத் தொடங்கி ஒன்றரை வருடத்திற்கும் மேலாகிறது. வைரஸ் பாதிப்பை கட்டுபடுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கடந்த 2020 மார்ச் மாதம் முதல் ஆறு மாதங்களுக்கும் மேலாக முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இக்காலகட்டங்களில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் மூலம் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள பட்டியலினத்தவர், பழங்குடியினர், சலவைத் தொழிலாளர்கள், பைரா மக்கள், திருநங்கையர், நாடோடிகள், மாற்றுத்திறனாளிகள், துப்புரவுப் பணியாளர்கள், மீனவர், கர்ப்பிணிப் பெண்கள், தெருவோர ஆதரவற்றோர், புலம்பெயர்ந்தவர்கள், கோல்பிங் உறுப்பினர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு பல கட்டங்களாக 14,398 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டது. மாவட்டங்கள் வாரியாக வழங்கப்பட்ட நிவாரண உதவிகளின் விவரம் பின்வருமாறு:.

**பயனாளிகள் விவரம்**

| செங்கல்பட்டு மாவட்டம் | மொத்த பயனாளிகள் | காஞ்சிபுரம் மாவட்டம் |
|---|---|---|
| 9358 | 14398 | 5040 |



## கோவிட் 19 இரண்டாம் அலையில் சி.ஆர்.டி.எஸ் - பணிகள்:

- கிராமப்புற மக்களிடையே கொரோனா விழிப்புணர்வு வழங்குதல்
- முகக்கவசம் வழங்குதல்
- சானிடைசர் வழங்குதல்
- கையுறைகள் வழங்குதல்
- தார்பாய்கள் வழங்குதல்
- உணவு வழங்குதல்
- நிவாரண பொருட்கள் வழங்குதல் (அரிசி, மளிகை பொருட்கள் அடங்கிய பைகள்)
- குழந்தைகளுகளுக்கு சத்துணவு, மற்றும் சிற்றுண்டி வழங்குதல்
- ஆற்றுபடுத்துதல் சேவை

## கொரோனா – இரண்டாம் அலை (உருமாறிய வைரஸ்)

கோவிட் -19 வைரஸ் பெருந்தொற்றின் இரண்டாம் அலை முதல் அலையைவிட வேகமாக பரவக்கூடியதாகவும், 18 முதல் 45 வயதுக்குட்டபட்ட இளம் வயதினரை அதிக எண்ணிக்கையில் பாதிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. கொரோனா வைரஸ்க்கும் மனித சமூகத்திற்கும் இடையேயான யுத்தம் இரண்டாம் அலையில் மிகத்தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 2020 ஆம் ஆண்டைவிட 2021 ஆம் அண்டில்தான் அதிகப்படியான மக்கள் மீதான தாக்குதலை இந்த வைரஸ் நடத்திக் கொண்டிருக்கிறது. கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் பரிசோதனைகளின் எண்ணிக்கையையும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐ.சி.எம்.ஆர்) அதிகப்படுத்தி வருகிறது. இரண்டாவது அலையின் வேகம் அதிகமாக இருப்பதற்கு உருமாறிய வைரஸ் ஒரு காரணமாக இருக்கலாம் எனவும் மருத்துவ உலகினர் அச்சம் தெரிவிக்கின்றனர்.

முதலில் இங்கிலாந்தில் உருமாறிய கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. மேலும் பிரேசில், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் மூலக்கூறு ஆய்வில் உருமாற்றம் அடைந்த வைரஸ்கள் கண்டறியப்பட்டன. இதன் தொடர்ச்சியாக இந்தியாவின் 18 மாநிலங்களில் புதிய வகை கொரோனா வைரஸ்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் மத்திய சுகாதாரத்துறை தெரிவித்தது.

தற்போது கொரோனா பாதிப்பின் காரணமாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பட்டியலில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் இந்தியா உள்ளது.

## பாதிப்பின் அறிகுறிகள்:

முதல் அலையில் காய்ச்சல், வறட்டு இருமல், சுவாசக்குழல் பாதிப்பு, சுவாசிப்பதில் சிரமம், லேசான நுரையீரல் பாதிப்பு என்று இருந்தது. தற்போது இரண்டாம் அலையில் பின்வரும் புதிய அறிகுறிகளை மருத்துவ நிபுணர்கள் பட்டியலிடுகின்றனர்.

- 101டிகிரி பாரன்ஹீட்டுக்கு மேல் காய்ச்சல், இருமல், தும்மல் போன்ற வழக்கமான அறிகுறிகள் தலைவலி
- வயிற்றுப்போக்கு
- உடல்வலி
- உடல்வலுவின்மை
- அசௌகரியமான உணர்வு வாந்தி
- கேட்கும் திறனில் பிரச்சினைகள்
- இமைப்படல அழற்சி
- 10அப᾿1-க்கு மேல் சி-ரியாக்டிவ் புரதம் (CRP)வேகமாக அதிகரித்துக்கொண்டே இருத்தல்
- மூன்றாம் நாளில் இருமல்
- ஆறுநிமிட நடைசோதனையில் எஸ்.பி.ஓ2 (ஆக்ஸிஜன் செறிவு Spo2)5 சதவீதம் குறைவது நிமோனியா இருப்பதை குறிக்கிறது.

இவற்றில் உள்ள அறிகுறிகள் தென்பட்டால் அவற்றை கோவிட் 19 அறிகுறிகளாக கருதி மருத்துவரை அணுகுதல் வேண்டும். முதல்நாள் அறிகுறி தோன்றியதிலிருந்து ஐந்தாம்நாள் மிக முக்கியமானது. நடக்கும்போது ஆக்சிஜன் அளவு 95க்கு கீழே சென்றால் அவருக்கு நிமோனியா இருப்பதாக பொருள். அது அவசர சிகிச்சை தேவைப்படும் நிலை ஆகும்.

## பாதிப்பு மற்றும் இறப்பு எண்ணிக்கை:

கொரோனாவால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா இரண்டாம் இடத்திலும், பிரேசில் நாடு மூன்றாம் இடத்திலும் உள்ளது. இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 3,34,77,819 பேராக உயர்ந்துள்ளது. இந்தியாவில் கொரோனாவால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4,45,165 பேராகும். ஒரே நாளில் 296 பேர் மரணமடைந்துள்ளனர். இந்தியாவில் கொரோனாவிலிருந்து மீண்டோரின் எண்ணிக்கை 3,27,07,589. பிரேசில் நாட்டில் மொத்தம் 2,12,39,783 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். ரஷ்யா, பிரான்ஸ் பிரிட்டன் நாடுகளில் 74 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை பிரேசிலில் கொரோனாவிலிருந்து மீண்டோரின் எண்ணிக்கை 20,28,0294 ஆகும். ஒரேநாளில் கொரோனா தொற்று அதிகம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அமெரிக்காவுக்கு அடுத்து இந்தியா உள்ளது.

## இந்தியவில் மாநிலம் மற்றும் ஒன்றியம் பகுதி வாரியாக கொரோனா வைரஸ் தொற்று

| மாநிலம் | மொத்தத் தொற்றுகள் | இறப்புகள் | உடல்நலம் தேறியவர்கள் | சிகிச்சை பெற்று வருவோர் |
|---|---|---|---|---|
| 36/36 | 3,29,03,289 | 4,39,895 | 3,20,63,616 | 3,99,778 |
| அந்தமான் நிக்கோபார் தீவுகள் | 7,567 | 129 | 7,431 | 7 |
| ஆந்திர பிரதேசம் | 20,16,680 | 13,877 | 19,88,101 | 14,702 |
| அருணாச்சல பிரதேசம் | 53,156 | 261 | 52,066 | 829 |
| அசாம் | 5,90,553 | 5,677 | 5,78,101 | 6,775 |
| பீகார் | 7,25,728 | 9,654 | 7,15,984 | 90 |
| சண்டிகர் | 65,110 | 814 | 64,259 | 37 |
| சத்தீஸ்கர் | 10,04,528 | 13,555 | 9,90,588 | 385 |
| தாத்ரா நகர் | 10,663 | 4 | 10,655 | 4 |
| தில்லி | 14,37,839 | 25,082 | 14,12,413 | 344 |
| கோவா | 1,74,146 | 3,202 | 1,70,031 | 913 |
| குஜராத் | 8,25,445 | 10,081 | 8,15,213 | 151 |
| அரியானா | 7,70,522 | 9,679 | 7,60,196 | 647 |
| இமாச்சல பிரதேசம் | 2,14,004 | 3,604 | 2,08,612 | 1,788 |
| ஜம்மு காஸ்மீர் | 3,25,618 | 4,409 | 3,19,889 | 1,320 |
| ஜார்கண்ட் | 3,47,922 | 5,132 | 3,42,647 | 143 |
| கர்நாடகம் | 29,51,844 | 37,361 | 28,96,079 | 18,404 |
| கேரளம் | 41,22,133 | 21,149 | 38,60,248 | 2,40,736 |
| லடாக் | 20,573 | 207 | 20,298 | 68 |
| இலட்சத்தீவுகள் | 10,348 | 51 | 10,272 | 25 |
| மத்திய பிரதேசம் | 7,92,197 | 10,516 | 7,81,590 | 91 |
| மகாராட்டிரம் | 64,73,674 | 1,37,551 | 62,81,985 | 54,138 |
| மணிப்பூர் | 1,14,502 | 1,790 | 1,09,392 | 3,320 |
| மேகாலயா | 76,311 | 1,322 | 72,714 | 2,275 |
| மிசோரம் | 61,992 | 219 | 51,390 | 10,383 |
| நாகாலாந்து | 30,204 | 624 | 28,802 | 778 |
| ஒடிசா | 10,09,223 | 8,028 | 9,94,639 | 6,556 |
| புதுச்சேரி | 1,23,802 | 1,815 | 1,21,150 | 837 |
| பஞ்சாப் | 6,00,715 | 16,435 | 5,83,927 | 353 |
| ராஜஸ்தான் | 9,54,108 | 8,954 | 9,45,070 | 84 |
| சிக்கிம் | 30,025 | 371 | 28,599 | 1,055 |
| தமிழ்நாடு | 26,17,943 | 34,961 | 25,66,504 | 16,478 |
| தெலுங்கானா | 6,58,689 | 3,878 | 6,49,002 | 5,809 |
| திரிபுரா | 83,127 | 803 | 81,446 | 878 |
| உத்தராகண்டம் | 3,43,034 | 7,387 | 3,35,264 | 383 |
| உத்தரவிரதேசம் | 17,09,386 | 22,841 | 16,86,287 | 258 |

## பழைய கொரோனா வைரஸிலிருந்து உருமாறிய புதுவகை கொரோனா வைரஸ் எவ்வாறு வேறுபடுகிறது?



பொதுவாக வைரஸில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று சுயே வைரஸ் மற்றொன்று னுயே வைரஸ். தற்போது நமக்கு பரவி தொற்றை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் இந்த கொரோனா சுயே வகையைச் சார்ந்த வைரஸ். இந்தவகை வைரஸ்களின் குட்டிகள் தங்கள் தாயைப்போல் இல்லாமல் மரபுரீதியில் சிறிது மாறுபடும்.


இந்த மாற்றங்களை மியூட்டேஷன் என்பார்கள். நாட்கள் செல்லச்செல்ல இந்த வைரஸ் பல்கி பெருகி இலட்சக்கணக்கான வைரஸ்களை உருவாக்கும். அப்போது புதிதாக உருவாகும் வைரஸ்கள் தன்தாய் வைரஸிடமிருந்து அதிக அளவில் வேறுபட்டிருக்கும். இதை வேரியேஷன் என்கிறார்கள்.

## உருமாறிய கொரோனா வேகமாக பரவுகிறதா?

புதிய ஆய்வுகளின்படி உருமாறிய கொரோனா மற்ற வகைகளை விட எளிதாகவும் விரைவாகவும் பரவுகிறது. இதுகுறித்து எய்ம்ஸ் இயக்குநர் ரன்தீப் குலேரியா கூறுகையில் ஒரு முதன்மை நோயாளியால் இந்தமுறை அதிக பேர் பாதிக்கப்படுகிறார்கள். முன்பு ஒருவரிடமிருந்து அவரது தொடர்புகளில் உள்ள 30-40% பேருக்கு வைரஸ் பரவியது. ஆனால் தற்போது தொடர்பில் உள்ள 80-90மூ பேருக்கு வைரஸ் பரவுகிறது என்றும் இந்தவகை வைரஸ்கள் 70% வரை ஆபத்தானது என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## இரண்டாம் அலை தீவிரமாக பரவுவதற்கான காரணங்கள்:

- கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் உடலில் 2 அல்லது 3 மாதங்கள் வரையில்தான் இரத்தத்தில் எதிர்ப்புசக்தியின் புரதம் இருக்கும். இரத்தத்தில் எதிர்ப்புசக்தி குறையும்போது மக்கள் மத்தியில் கூடுதல் வேகத்துடன் பரவும்.
- நோய்த்தொற்று பாதிக்காத மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தாமல் இருப்பதால் நோய்த்தொற்று வேகமாக பரவும்.(முகக்கவசம்அணியாமல் இருப்பது, தனிமனித இடைவெளி கடைபிடிக்காமை, கைகளை அடிக்கடி சுத்தபடுத்தாமை, தடுப்பூசி செலுத்திக்கொள்ளாமை)



## நோய் பரவும் தீவிரம் அதிகரித்தல்:




இந்த உருமாறிய கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு நோய் அறிகுறி இல்லாமல் இருப்பவர்களிடமிருந்து பெரும-ளவில் இது பரவ ஆரம்பித்திருக்கிறது. தவிர இந்தமுறை உருமாறிய கொரோனா வைரஸ் மூச்சு பாதையின் துவக்கத்தில் அதாவது மூக்கில் தேங்குவது அதிகமாக இருக்கிறது. ஒரு முறை பாதிக்கப்பட்டவரின் மூக்கில் மாதிரியை எடுத்து பரிசோதித்து பார்த்ததில் 700 கோடி வைரஸ் இருக்கிறது.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட ஒருவர் மூச்சு விட்டால் ஒவ்வொரு மறையும் 20 வைரஸ் வெளியே வரும். பேச ஆரம்பித்தால் ஒரு நிமிடத்தில் 200 வைரஸ் வெளியேறுகிறது. அதே நபர் இருமினாலோ, தும்மினாலோ 200 மில்லியன் வைரஸ்கள் வெளியில் வரும். சாதாரண நபர் ஒருவர் பாதிக்கப்படுவதற்கு 1000 வைரஸ்கள் போதுமானது. இந்த கொரோனா இரண்டாம் அலையில் நோய் பரவும் வேகம், தீவிரம் எல்லாமே அதிகமாக இருக்கிறது. இதன் காரணமாக உருமாற்றம் அடைந்த வைரஸால்தான் கடந்த அலையைவிட இறப்பு விகிதம் அதி-கமாகிறது என்று கண்டறிந்தனர்.

## சிகிச்சை முறை:

சிகிச்சையை பொறுத்தவரை மிக ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு Lamp என்ற வழிமுறைதான் பயன்படுத்தப்படுகிறது. இதில் L என்பது low molecular weight heparin A என்பது azithro mycin, M என்பது methylprednisolone என்ற ஸ்டீராய்டு P என்பது prone positioning சற்று தீவிரமான நிலையில் உள்ளவர்களுக்கு Relamp என்ற முறை பயன்படுத்தப்படுகிறது. அதாவது மேலே சொன்ன சிகிச்சையோடு கூடுதலாக ரெம்டிசிவிர் எனாக்ஸபாரின் மருந்துகள் அளிக்கப்படும் தீவிர நிலையில் இருப்பவர்களுக்கு REVAMP என்ற சிகிச்சை வழிமுறை பின்பற்றப்படுகிறது. அதாவது ரெம்டிசிவிர் எனாக்ஸபாரின் வென்டிலேட்டர் எல்லாவித உடல் உழைப்பையும் நிறுத்துவதற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. குறிப்பாக ஓய்வும், துவக்கத்திலேயே வென்டிலேட்டரும் அளிப்பது மிக முக்கியம். அப்படிசெய்தால் பெரிய சிக்கல் இல்லாமல் மக்களை மீட்டுவிட முடியும் என்கிறார்கள் இந்திய மருத்துவகுழுவினர்.

## சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் நிவாரண பணிகள்:

கொரோனா இரண்டாம் அலையின் நெருக்கடியான காலகட்டத்தில் அரசால் பிறப்பிக்கப்பட்ட 144 தடை உத்தரவால் பல மாதங்களாக மக்கள் உணவு பொருட்கள், மருத்துவம், போன்ற அன்றாட தேவைகளுக்கு கூட வெளியில் செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். பல்வேறு வழிகளில் அரசு மற்றும் அரசுசாரா தனியார் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து அனைத்து மக்களுக்கும் கடந்த ஓராண்டுகாலமாக நிவாரண பணிகள் மேற்கொள்ளப்பட்டது. முக்கியம். அப்படிசெய்தால் பெரிய சிக்கல் இல்லாமல் மக்களை மீட்டுவிட முடியும் என்கிறார்கள் இந்திய மருத்துவகுழுவினர்.


இந்நிலையில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனமானது செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் விளிம்பு நிலையில் தேவையில் உள்ள மக்களை தேடிச்சென்று அவர்களுக்கான மீட்பு பணிகள் மற்றும் கொரோனா நிவாரண பொருட்கள், உணவு வழங்குதல், ஆலோசனை மற்றும் உளவியல் ரீதியான ஆற்றுபடுத்துதல், பல்வேறு நிலைகளில் விழிப்புணர்வு பயிற்சிகள், தடுப்பூசி குறித்த ஆலோசனைகள் போன்றவற்றை உடனடியாக வழங்கியது. தற்போது கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலையின் தாக்கத்திலும் உள்ளூர் மற்றும் வெளியூர் என பல நிறுவனங்களின் உதவியுடன் அனைத்து நிலை மக்களுக்கும் இன்றளவும் நிவாரண பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## முகக்கவசம் வழங்குதல்:

கொரோனா நோய்த்தொற்றின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்நிலையில் முகக்கவசம் அணிவது கட்டாயம் ஆகிவிட்டது. நம் கண்களுக்கு தெரியாமல் கோடிக்கணக்கான கிருமிகள் மற்றும் வைரஸ்கள் காற்றில் பரவி வருகின்றன. அப்படி இருக்க இந்த கொரோனா பரவலில் இருந்து நாம் நம்மை பாதுகாப்பாக வைத்துக்கொள்வது அவசியம் என்பதை கருத்தில் கொண்டு நம் நிறுவனமானது கொரோனா பரவலை தடுக்கும் அரசு பரிந்துரை செய்யப்பட்ட ஜ95 வகை முகக்கவசத்தை காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் 10 ஒன்றியங்களில் உள்ள கிராமப்புற மக்களுக்கு வழங்கி கொரோனா தொற்று பரவலில் இருந்து தன்னைத்தானே பாதுகாத்தல், நோய் பரவாமல் தடுத்தல், அரசு விதிமுறைகளை கடைபிடித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டது.

## ஒன்றியங்கள் வாரியாக முகக்கவசம் வழங்கப்பட்ட விவரம்:

| வ.எண் | ஒன்றியம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | 100 |
| 2 | காஞ்சிபுரம் | 100 |
| 3 | இலத்தூர் | 100 |
| 4 | மதுராந்தகம் | 100 |
| 5 | சித்தாமூர் | 100 |
| 6 | வாலாஜாபாத் | 100 |
| 7 | திருப்போரூர் | 100 |
| 8 | திருக்கழுக்குன்றம் | 100 |
| 9 | காட்டாங்கொளத்தூர் | 100 |
| 10 | அச்சிறுப்பாக்கம் | 100 |
| மொத்தம் | | 1000 |




## சமூக இடைவெளி மற்றும் கைகழுவுதல் – விழிப்புணர்வு பயிற்சி:

வளர்ந்து வரும் கொரோனா தொற்றின் வேகம் குறித்து வெளியிடப்பட்ட ஆய்வு தகவலின் படி, சமூக இடைவெளியை பின்பற்றாத இடங்களில் நோய்த்தொற்று விரைவாக பரவும் அபாயம் உள்ளது. ஒரு குறிப்பிட்ட இடத்திலோ, அல்லது நகரத்திலோ கொரோனா தொற்று பரவல் அதிகரிக்கிறது என்றால் அந்த நகரத்தில் சமூக இடைவெளி பின்பற்றபடவில்லை என்ற உண்மை புலப்படுகிறது. எனவே கிராமப்புற மக்களுக்கான விழிப்புணர்வு பயிற்சிகள் எம் நிறுவன பணியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களால் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இரண்டு மாவட்ட கிராமப்புற மக்களுக்கு அளிக்கப்பட்டது



## கைகளை கழுவுதல்:

கொரோனா வைரஸ் கைகளின் மூலமே ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவ அதிக வாய்ப்புள்ளதாகக் மருத்துவ ஆய்வில் கூறப்பட்டது. மக்களிடையே கைகளை கழுவுதலின் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு பயிற்சிகள் மற்றும் கைகளை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கான சோப், ஹேன்ட் வாஷ், ஹேன்ட் சா-னிடைசர் போன்றவை சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் மூலமாக வழங்கப்பட்டது.




## எப்போது கைகளை கழுவுதல் வேண்டும்?



- வெளியில் சென்று வந்த பிறகு
- உணவு உண்பதற்கு முன்பும், பின்பும்
- கழிவறையை பயன்படுத்திய பிறகு
- வெளியில் சென்று பொருட்களை வாங்கி வந்த பிறகு
- நோயினால் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்த பிறகு

என அடிக்கடி 10 நிமிடத்திற்கு ஒருமுறை கைகளை சோப்பு மற்றும் தண்ணீரால் சுத்தம் செய்ய வேண்டும் என்றும்,



## எந்த முறைகளில் கைகளை கழுவ வேண்டும்?

- குழாயிலிருந்து வேகமாக கொட்டிக்கொண்டிருக்கும் தண்ணீரில் கைகளை 20-30 விநாடிகள் கழுவ வேண்டும்
- கைகளை சோப் மற்றும் லிக்யுட் சோப் கொண்டு கழுவுதல்
- கைகளை கழுவும்போது முதலில் இரண்டு உள்ளங்கைகளையும் நன்றாக தேய்த்து கழுவ வேண்டும்.
- வலது புறங்கையை இடது புறங்கையாலும், இடது புறங்கையை வலது புறங்கையாலும் மாற்றி மாற்றி தேய்க்க வேண்டும்.
- விரல்களின் இடுக்குகளை நன்றாக அழுத்தி தேய்க்க வேண்டும்.
- நகக்கண்களிலும் சோப் பயன்படுத்தி அழுக்குகள் போக நன்றாக தேய்த்து கழுவ வேண்டும்.
- கைகளின் கட்டைவிரல்களை கீழ்நோக்கி பிடித்து அவற்றை சுற்றியும் நன்றாக தேய்க்க வேண்டும்.
- இறுதியாக இரண்டு மணிக்கட்டுகளையும் நன்றாக தேய்த்து கழுவுதல் வேண்டும்.

இப்படி ஒவ்வொன்றையும் 4 -5 விநாடிகள் செய்ய வேண்டும்.

## இதுபோன்ற விழிப்புணர்வுகள் 10 ஒன்றியங்களில் உள்ள கிராமமக்களுக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் பங்கேற்றவர்கள் விவரம்:

| வ.எண் | ஒன்றியம் | பங்கேற்பாளர்கள் |
|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | 1085 |
| 2 | காஞ்சிபுரம் | 966 |
| 3 | இலத்தூர் | 625 |
| 4 | மதுராந்தகம் & சித்தாமூர் | 494 |
| 5 | வாலாஜாபாத் | 1030 |
| 6 | திருப்போரூர் | 1099 |
| 7 | திருக்கழுக்குன்றம் | 1168 |
| 8 | காட்டாங்கொளத்தூர் | 310 |
| 9 | அச்சிறுப்பாக்கம் | 1100 |
| மொத்தம் | | 7877 நபர்கள் |

## உணவு வழங்குதல்:

ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வது நமது உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. நோய்த்தொற்று ஏற்படுவதற்கு முக்கிய காரணம் நம் உடலில் நோய்எதிர்ப்பு சக்தியின் குறைபாடு என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றார்கள். பழங்கள், காய்கறிகள், மற்றும் பருப்பு வகைகள், நார்ச்சத்து அதிகம் மிகுந்த உணவு வகைகளை எடுத்துக்கொள்வதன் மூலம் நம் உடலுக்கு தேவையான சத்துக்கள் முழுமையாக கிடைக்கின்றன.

இதைக்கருத்தில் கொண்டு சி.ஆர்.டி.எஸ் மற்றும் பீடிங் இந்தியா (Feeding India) உணவு நிறுவனத்தின் மூலம் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள ஏழை, எளிய, ஆதரவற்ற மக்கள்,மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், குழந்தைகளுக்கு உணவு சமைத்து வழங்கப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | ஒன்றியம் | பயனாளிகள் |
|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | 150 |
| 2 | காஞ்சிபுரம் | 110 |
| 3 | இலத்தூர் | 80 |
| 4 | மதுராந்தகம் & சித்தாமூர் | 80 |
| 5 | வாலாஜாபாத் | 225 |
| 6 | திருப்போரூர் | 338 |
| 7 | திருக்கழுக்குன்றம் | 109 |
| 8 | காட்டாங்கொளத்தூர் | 95 |
| 9 | அச்சிறுப்பாக்கம் | 90 |
| மொத்தம் | | 1277 நபர்கள் |

## சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் – உணவு பொருட்கள் (அரிசி, மளிகை) வழங்குதல்:

| வ.எண் | ஒன்றியம் | பயனாளிகள் |
|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | 243 |
| 2 | காஞ்சிபுரம் | 28 |
| 3 | வாலாஜாபாத் | 155 |
| 4 | திருப்போரூர் | 480 |
| 5 | திருக்கழுக்குன்றம் | 421 |
| 6 | அச்சிறுப்பாக்கம் | 111 |
| | மொத்தம் | 1438 நபர்கள் |

## கொரோனா மருத்துவ பரிசோதனை உபகரணங்கள்: (மகளிர் சுய உதவிக்குழுக்கள் வாரியாக)

| வ.எண் | ஒன்றியம் | பயனாளிகள் |
|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | 4 |
| 2 | காஞ்சிபுரம் | 4 |
| 3 | இலத்தூர் | 4 |
| 4 | மதுராந்தகம் & சித்தாமூர் | 4 |
| 5 | வாலாஜாபாத் | 5 |
| 6 | திருப்போரூர் | 7 |
| 7 | திருக்கழுக்குன்றம் | 7 |
| 8 | காட்டாங்கொளத்தூர் | 4 |
| 9 | அச்சிறுப்பாக்கம் | 4 |
| | மொத்தம் | 43 மகளிர் குழுக்கள் |

## கொரோனா கால மனநலம் மற்றும் ஆற்றுபடுத்துதல் சேவை:

கொரோனா முதல் மற்றும் இரண்டாம் அலை தாக்கத்தால் மக்கள் பல்வேறு நிலைகளில் மனதளவிலும், உடலளவிலும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர். நோய்த்தொற்று பரவல் அதிகரிப்பு, வேலையிழப்பு, வெளியில் செல்ல முடியாமை, பொருளாதார சிக்கல், நோய் பற்றிய பயம், குடும்ப மேலாண்மை, போன்ற காரணங்களால் மன அழுத்தத்திற்கு ஆளாக நேரிட்டது. இதுபோன்ற சூழலில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் மனநலம் மற்றும் உடல்நலம் சார்ந்த பிரச்சனைகளை கையாளுதல் குறித்து நிறுவன பணியாளர்களுக்கு கொரோனா கால உளவியல் சார்ந்த மனநலம் மற்றும் ஆற்றுபடுத்துதல் சேவையை மேற்கொள்ள பயிற்சிகள் வழங்கப்பட்டு காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள அனைத்து நிலை மக்களுக்கும் உளவியல் சார்ந்த ஆற்றுபடுத்துதல் அலைபேசி வாயிலாகவும், மற்றும் பல்வேறு விழிப்புணர்வு கருத்தரங்குகள் வாயிலாகவும் கொடுத்து வருகின்றது. சி.ஆர்.டி.எஸ்-ன் மனநலம் மற்றும் ஆற்றுப்படுத்துதல் சேவை மூலம் பயனடைந்தவர்கள் பட்டியல் ஒன்றியம் வாரியாக கீழே தரப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒன்றியம் | பயனாளிகள் |
|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | 60 |
| 2 | காஞ்சிபுரம் | 40 |
| 3 | இலத்தூர் | 80 |
| 4 | மதுராந்தகம் & சித்தாமூர் | 50 |
| 5 | வாலாஜாபாத் | 51 |
| 6 | திருப்போரூர் | 55 |
| 7 | திருக்கழுக்குன்றம் | 37 |
| 8 | காட்டாங்கொளத்தூர் | 60 |
| 9 | அச்சிறுப்பாக்கம் | 50 |
| | மொத்தம் | 483 நபர்கள் |

## கொரோனா தடுப்பூசி செலுத்துதல்:

கொரோனா வைரஸ் பெருந்தொற்று பரவலின் உலகின் புதிய மையப்பகுதியாக விளங்கும் இந்தியாவில் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2.6 கோடியை தாண்டியுள்ளது. நம் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி போடும் பணிகளையும் முடுக்கி விட்டுள்ளது. இதற்காக உற்பத்தியாளர்களிடம் இருந்து நேரடியாக தடுப்பூசியை பெற்று மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இலவசமாக வழங்கியும் வருகின்றன. இச்சூழலில் கொரோனா நோய்த்தாக்கத்தை குறைக்க சி.ஆர்.டி.எஸ் நிறுவனமானது பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் துண்டு பிரசுரங்களை கொண்டு தடுப்பூசியின் பயன்கள், தடுப்பூசி மீதான பயம் போக்குதல், தடுப்பூசியின் நன்மைகள் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சென்று பொதுமக்கள் பயமின்றி தடுப்பூசி செலுத்திக்கொள்வதில் முக்கிய பங்கு வகித்தது. இவ்வாறாக நிறுவனத்தின் வழிகாட்டலில் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தடுப்பூசி செலுத்திக்கொண்டோர் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ.எண் | ஒன்றியம் | விழிப்புணர்வு பெற்றோர் | தடுப்பூசி செலுத்திக்கொண்டோர் |
|---|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | 1085 | 755 |
| 2 | காஞ்சிபுரம் | 966 | 459 |
| 3 | இலத்தூர் | 625 | 350 |
| 4 | மதுராந்தகம் & சித்தாமூர் | 494 | 270 |
| 5 | வாலாஜாபாத் | 1030 | 578 |
| 6 | திருப்போரூர் | 1099 | 870 |
| 7 | திருக்கழுக்குன்றம் | 1168 | 840 |
| 8 | காட்டாங்கொளத்தூர் | 310 | 150 |
| 9 | அச்சிறுப்பாக்கம் | 1100 | 600 |
| மொத்தம் | | 7877 | 4872 |



## மாவட்டங்கள் வாரியாக சி.ஆர்.டி.எஸ் நிவாரண உதவிகள் விவரம்:

| வ.எண் | விபரம் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| | காஞ்சிபுரம் மாவட்டம்- மளிகைப்பொருட்கள்(ம)உணவு | |
| 1 | பட்டியலினத்தவர்கள் (மகளிர்குழுக்கள்) | 1668 |
| 2 | பட்டியலினத்தவர்கள் | 300 |
| 3 | மருத்துவ உபகரண பெட்டி (மகளிர் குழுக்கள்) | 200 |
| 4 | தன்னார்வலர்களுக்கான மருத்துவ உபகரண பை | 12 |
| 5 | உணவு வழங்குதல் | 390 |
| | உணவு வழங்குதல் | 1000 |
| | பழங்குடியினர் | 220 |
| | மாற்றுத்திறனாளிகள் | 115 |
| | சலவைத்தொழிலாளர்கள் | 300 |
| | தொழுநோயாளிகள் | 140 |
| | பட்டியலினத்தவர்கள் | 125 |
| | புலம்பெயர்ந்தவர்கள் | 100 |
| 6 | மளிகை பொருட்கள் (CRDS) | 426 |
| | மளிகை பொருட்கள் | 850 |
| | மாற்றுத்திறனாளிகள் | 400 |
| | சலவைத்தொழிலாளர்கள் | 200 |
| | பழங்குடியினர் | 250 |
| 7 | முகக்கவசம் | 547 |
| 8 | சானிடைசர் | 285 |
| 9 | கையுறைகள் | 168 |
| | மொத்தம் | 5846 குடும்பங்கள் |

## மாவட்டங்கள் வாரியாக சி.ஆர்.டி.எஸ் நிவாரண உதவிகள் விவரம்:

| வ.எண் | விபரம் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| | செங்கல்பட்டு மாவட்டம்- மளிகைப்பொருட்கள்(ம)உணவு | |
| 1 | பட்டியலினத்தவர்கள் (மகளிர்குழுக்கள்) | 2332 |
| 2 | பழங்குடியினர் | 700 |
| 3 | மருத்துவ உபகரண பெட்டி (மகளிர் குழுக்கள்) | 370 |
| 4 | தன்னார்வலர்களுக்கான மருத்துவ உபகரண பை | 36 |
| 5 | உணவு வழங்குதல் | 887 |
| | உணவு வழங்குதல் | 2500 |
| 6 | சலவைத்தொழிலாளர்கள் | 415 |
| | தொழுநோயாளிகள் | 180 |
| | பட்டியலினத்தவர்கள் | 350 |
| | புலம்பெயர்ந்தவர்கள் | 245 |
| | திருநங்கைகள் | 165 |
| | தெருவோர ஆதரவற்றோர் | 300 |
| | பைரா மக்கள் | 220 |
| | பழங்குடியினர் | 375 |
| | மாற்றுத்திறனாளிகள் | 100 |
| | விதவைகள் | 150 |
| | மளிகை பொருட்கள் (CRDS) | 1012 |
| 7 | மளிகை பொருட்கள் | 1150 |
| | மாற்றுத்திறனாளிகள் | 235 |
| | சலவைத்தொழிலாளர்கள் | 250 |
| | பழங்குடியினர் | 365 |
| | பட்டியலினத்தவர்கள் | 225 |
| | புலம்பெயர்ந்தவர்கள் | 75 |
| 8 | முகக்கவசம் | 600 |
| 9 | சானிடைசர் | 250 |
| 10 | கையுறைகள் | 150 |
| | மொத்த குடும்பங்கள் | 9987 |

## மாவட்டங்கள் வாரியாக சி.ஆர்.டி.எஸ் நிவாரண உதவிகள் விவரம்:

| வ.எண் | மாவட்டங்கள் | பயனாளிகளின் குடும்பங்கள் |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | 9987 |
| 2 | காஞ்சிபுரம் | 5846 |
| | மொத்த குடும்பங்கள் | 15,833 |

## கொரோனா பெருந்தொற்று பரவலை கட்டுப்படுத்துதலுக்கான வழிமுறைகள்

### கொரோனா சோதனைகளை அதிகப்படுத்துதல்

### ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனை

கொரோனா ஒழிப்பின் முதல் பணி கொரோனா சோதனைகளை அதிகப்படுத்துவதே என்பது நிபுணர்களின் கூற்றாக உள்ளது.இதனால் கொரோனா சோதனைகளை எளிதாக்கும் வகையில் பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டது. வீட்டில் இருந்தபடியே கொரோனா பரிசோதனை மேற்கொள்ளும் கருவிக்கு ஒப்புதல் தரப்பட்டதை தொடர்ந்து உப்புத்தண்ணீரில் வாய் கொப்பளித்து ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனை செய்யும் கொரோனா பரிசோதனை முறை கண்டறியப்பட்டுள்ளது. அறிவியல் தொழில் ஆராய்ச்சி கவுன்சிலின் (சி.எஸ்.ஐ.ஆர்) நாக்பூர் - தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி மையம் (NEERI) ஆராய்ச்சியாளர்கள் இணைந்து இந்த முறையை கண்டுபிடித்துள்ளனர். இந்த கண்டுபிடிப்பு தொடர்பாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை வெளியிட்ட அறிக்கையில் உப்புத்தண்ணீரில் வாய் கொப்பளித்து ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனை செய்யும் வகையில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள இந்த முறையானது எளிமையாகவும் விரைவாகவும் உள்ளது. இந்த முறையில் 3 மணிநேரத்தில் சோதனை முடிவுகளை தெரிந்துக் கொள்ளலாம். கிராமங்கள் மற்றும் பழங்குடியின பகுதிகளில் பரிசோதனை மேற்கொள்ள இந்த முறை பொருத்தமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தடுப்பூசி செலுத்துதல்:

இந்தியாவில் கொரோனா வைரஸில் இருந்து மக்களை பாதுகாக்க 130 கோடி மக்களுக்கு தடுப்பூசி போடும் பணி கடந்த ஜனவரி 16 ஆம் தேதி தொடங்கியது. கொரோனா வைரஸ் தடுப்பூசி போடும் திட்டத்தை நாடு முழுவதும் சில கட்டுபாடுகளுடன் இந்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன்படி முதலில் வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ள முன்கள பணியாளர்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. அவர்களை தொடர்ந்து 60 வயதை கடந்தவர்கள், பிறகு 45 வயதை கடந்தவர்கள் என இந்த கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டன.

2021 ஜீலை மாதத்திற்குள் 30 கோடி மக்களுக்கு கோவிட் தடுப்பூசி கொடுப்பதே அரசின் குறிக்கோள். இது உலகின் மிகப்பெரிய தடுப்பூசி வழங்கும் திட்டம் என்று சொல்லப்படுகிறது.



அதற்கு பிறகு மே 1 ஆம் தேதி முதல் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம் என அரசு அறிவித்தது.

இந்தியாவில் இதுவரை மொத்தம் 86 கோடியே 1 இலட்சத்து 59 ஆயிரத்து 11 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது.

## தடுப்பூசி ஏன் போட வேண்டும் ..? அதன் முக்கியத்துவம் என்ன..?

நோயிலிருந்து நாம் நம்மை தற்காத்துக்கொள்ள வேண்டுமெனில் தடுப்பூசி அவசியம் தேவை. குறிப்பாக இந்த கொரோனா என்னும் கொடிய நோயை கட்டுபடுத்த வேண்டுமெனில் மக்கள் அனைவரும் கட்டாயம் தடுப்பூசி போட வேண்டும். இல்லையெனில் இந்தசூழல் நீடித்துக்கொண்டேதான் இருக்கும்.

## கொரோனா தடுப்பூசி – கோவேக்சின்

கோவேக்சின் செயலற்ற கொரோனா வைரஸைக் கொண்டு உருவாக்கப்பட்ட தடுப்பூசி இது. இதை ஆங்கிலத்தில் ஐயைெஉவளையவநன ஏயஉஉைநெ என்கிறார்கள். எனவே இதை உடலில் செலுத்துவது பாதுகாப்பானது. இந்த தடுப்பூசியை பாரத் பயோடெக் என்கிற 24 ஆண்டுகளாக செயல்படும் இந்திய அரசு நிறுவனம் உருவாக்கியது. இதுவரை இந்த நிறுவனம் 16 தடுப்பூசிகளை உருவாக்கி இருக்கிறது. இந்தியாவின் நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் வைராலஜி தனிமைப்படுத்தி வைத்த கொரோனா வைரஸ் மாதிரியைக் கொண்டு கோவேக்சின் தடுப்பூசியை உருவாக்கி இருக்கிறது.

பாரத் பயோடெக் இந்த தடுப்பூசியை நம் உடலில் செலுத்தும்போது நம் உடலில் இருக்கும் நோயெதிர்ப்பு மண்டலம் இறந்த கொரோனா வைரஸைக் கூட அடையாளம் கண்டு, அதை எதிர்க்க ஆன்டிபாடிக்களை உருவாக்கும்.




இந்த தடுப்பூசியின் இரண்டு டோஸ் மருந்துகள் நான்கு வார இடைவெளியோடு வழங்கப்படுகிறது. இத்தடுப்பூசியை 2 முதல் 8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் சேமித்து வைக்கலாம். இந்த தடுப்பூசியின் செயல்திறன் 81 சதவீதமாக இருப்பதாக மூன்றாம் கட்ட மருத்துவ பரிசோதனையின் முதல்நிலை தரவுகள் கூறுகின்றன.

## கோவிசீல்டு:



ஆக்ஸ்போர்டு ஆஸ்ட்ராசெனீகா கண்டுபிடித்த தடுப்பூசி மருந்தை சீரம் இன்ஸ்டிட்யூட் ஆப் இந்தியா நிறுவனம் உற்பத்தி செய்து வருகிறது. ஒரு மாத காலத்திற்கு 6 கோடி டோஸ் தடுப்பூசியை உற்பத்தி செய்வதாக கூறுகிறது.

அடினோவைரஸ் எனப்படும் சிம்பன்சி விலங்குகளில் காணப்படும் பொதுவான சளி வைரஸில் இந்த கொரோனா தடுப்பூசி உருவாக்கப்பட்டு இருக்கிறது. அந்த வைரஸை, கொரோனா வைரஸ் போல உருமாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. இருப்பினும் அவ்வைரஸ் உடலுக்கு எந்தவித உபாதையும் ஏற்படுத்தாது.

இந்த தடுப்பூசியை நம் உடலில் செலுத்தியபின் அது நம் உடலில் இருக்கும் நோயெதிர்ப்பு மண்டலத்தை ஆன்டிபாடிக்களை உருவாக்கச் செய்து கொரோனா வைரஸ் வந்தால் தாக்கி அழிக்க தயார்படுத்தும்.

இந்த தடுப்பூசி இரண்டு டோஸ்களாக 4 முதல் 12 வார இடைவெளிக்குள் செலுத்தப்படுகிறது. 2-8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் சேமித்து வைத்து மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கலாம்.
பைசர் பயோ என் டெக் நிறுவனத்தின் தடுப்பூசியை -70 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் சேமித்து வைக்க வேண்டும். அதை அதிகமுறை இடமாற்றம் செய்ய முடியாது. இந்தியாவில் சில இடங்களில் கோடைகாலத்தில் வெப்பநிலை 50 டிகிரி செல்சியஸ் வரை செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தடுப்பூசி போட்டுக்கொண்டபின் எந்த மாதிரியான பக்க விளைவுகள் இருக்கும்?

தடுப்பூசி போட்ட 72 மணி நேரத்திற்கு லேசான காய்ச்சல், தலைவலி, உடல்அசதி வரலாம். சிலருக்கு வாந்தி ஏற்படும். இவை அனைத்தும் சாதாரண பக்க விளைவுகள் தான். இவற்றிற்கு காய்ச்சல் மாத்திரைகளை உட்கொண்டாலே போதுமானது. இதை மருத்துவரே பரிந்துரைப்பார். ஊசிபோட்ட இடத்தில் சிலருக்கு அரிப்பு, வலி, தடிப்பு போன்ற சரும அல்ர்ஜியும் வரலாம். இதுவும் சாதாரண பக்க விளைவுகள் தான். மேலே குறிப்பிட்ட அறிகுறிகள் இருந்தால் பயம் வேண்டாம். அவை அதிகபட்சமாக 3 நாட்கள் வரை மட்டுமே இருக்கும்.

## மத்திய, மாநில அரசுகளின் கொரோனாகால அவசர நடவடிக்கைகள் – மெகா தடுப்பூசி முகாம்கள்:

உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், பேருந்து நிலையங்கள், மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்கள் என அனைத்து இடங்களிலும் தடுப்பூசி முகாம்கள் ஏற்பாடு செய்தும், நடமாடும் தடுப்பூசி முகாம்கள் மூலமாகவும் மக்களுக்கு தடுப்பூசி போடும் பணிகளை மத்தியமாநில அரசுகள் முடுக்கி விட்டுள்ளன. அதைத்தொடர்ந்து அனைத்து நாடுகளும் நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அந்தந்த மாநிலங்களில் மெகா தடுப்பூசி முகாம்களை ஏற்பாடு செய்து அதன்மூலம் மக்களுக்கு கொரோனா தடுப்பூசியை செலுத்தி வருகின்றனர்.

## கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டோர் எண்ணிக்கை:

தற்போதைய சூழலில் தடுப்பூசி மட்டுமே கொரோனாவை ஒழிக்கும் பேராயுதமாக பார்க்கப்படுகிறது. உலகின் அனைத்து நாடுகளும் வேக்சின் பணிகளையே மிகத்தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. இந்தியாவில் இதுவரை மொத்தம் 86 கோடியே 1 இலட்சத்து 59 ஆயிரத்து 11 பேருக்கு கொரோனா தடுப்பூசி முதல் டோஸ்கள் செலுத்தப்பட்டு உள்ளன.

## இரண்டாவது டோஸ்:க்கை:

இந்தியாவில் இதுவரை 22 கோடியே 70 இலட்சம் பேருக்கு இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் அனைவருக்கும் தடுப்பூசி போட வேண்டும் என்பதை இலக்காக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

## நன்றி...

கோவிட் 19 பெருந்தொற்று இரண்டாம் அலை பெரும் பாதிப்பை ஏற்படுத்திய இக்கட்டான காலகட்டத்தில் மக்களை பெருந்தொற்றிலிருந்து காத்திட நம் நிறுவனம் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளிலும், நிவாரண பணிகளிலும் உறுதுணையாக இருந்த செங்கல்பட்டு மறைமாவட்டம் (THE DIOCESE), செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகம், காரிதாஸ் ஜெர்மனி, காரிதாஸ் இந்தியா, காரிதாஸ் ஜப்பான், காரிதாஸ் ஹாங்காங், தமிழ்நாடு சமூக சேவை மையம், கோல்பிங் இந்தியா, ஜொமேட்டோ உணவு நிறுவனம், சிறுவழி சமூக நிறுவனம், தன்னார்வ தொண்டர்கள், காவல்துறை நண்பர்கள், மருத்துவர்கள், சி.ஆர்.டி.எஸ் பணியாளர்கள், உள்ளூர் உபகாரிகள், நல்ல உள்ளங்கள், அருட்பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி.

சி.ஆர்.டி.எஸ் மற்றும் பீடிங் இந்தியா (Feeding India) உணவு நிறுவனத்தின் மூலம் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள 1277 ஏழை, எளிய, ஆதரவற்ற மக்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், குழந்தைகளுக்கு உணவு சமைத்து வழங்கப்பட்டது













## சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் மூலம் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள ஏழை, எளிய ஆதரவற்ற மக்களுக்கு உணவு பொருட்கள் (அரிசி, மளிகை) வழங்கிய நிகழ்வு















# சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் மூலம் மக்களுக்கு கொரோனா வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வை வழங்கியபோது
















**சி.ஆர்.டி.எஸ் மற்றும் பீடிங் இந்தியா (Feeding India) வழியாக இரண்டாம் கட்டமாக கிராமப்புறங்களில் உள்ள சிறார்களுக்கும் முதியோர்களுகும் உணவு பொருட்கள் வழங்கிய நிகழ்வு**













## சி.ஆர்.டி.எஸ் மற்றும் பீடிங் இந்தியா (Feeding India) வழியாக இரண்டாம் கட்டமாக கிராமப்புறங்களில் உள்ள சிறார்களுக்கும் முதியோர்களுகும் உணவு பொருட்கள் வழங்கிய நிகழ்வு













## சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழியாக செங்கல்பட்டு மறைமாவட்ட மேதகு ஆயர் A.நீதிநாதன் அவர்களின் தலைமையில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டது.
















# சி.ஆர்.டி.எஸ் – காரிதாஸ் ஜெர்மனி வழியாக ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்ட மளிகை பொருட்கள்














# சி.ஆர்.டி.எஸ் – காரிதாஸ் இந்தியா வழியாக ஏழை எளிய மக்களுக்கு செங்கல்பட்டு மறைமாவட்ட மேதகு ஆயர் A.நீதிநாதன் அவர்களின் தலைமையில் வழங்கப்பட்ட மளிகை பொருட்கள்


















# CRDS - TASOSS- LITTLE WAY- ASSOCIATION
## வழியாக ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்ட உணவு பொருட்கள் (மளிகை பொருட்கள்)










# கொரோனா வைரஸ் (COVID-19)

## கொரோனா வைரஸ் (COVID - 19)

- கொரோனா வைரஸ் என்பது மனிதர்களுக்கு காய்ச்சல், இருமல், மூச்சுத் திணறல் ஆகியவற்றை ஏற்படுத்தக் கூடிய ஒருவகை வைரஸ் கிருமியாகும்.
- சீனாவின் வூகான் நகரத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஏற்பட்டு பல நாடுகளுக்கு பரவி உள்ளது. இது விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவி இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

## நோயின் அறிகுறிகள்:

- காய்ச்சல், இருமல்
- உடல் சோர்வு
- ஒரு சிலருக்கு மூச்சுத் திணறல் ஏற்படும்.

## கொரோனா வைரஸ் நோய் பரவும் விதம்:

- நோய் அறிகுறிகள் கண்ட நபர் இருமும் போதும், தும்மும் போதும், வெளிப்படும் நீர்த் திவலைகள் மூலம் அருகில் உள்ளவர்களுக்கு நேரடியாக பரவுகிறது (<20%).
- மேலும் இருமல் மற்றும் தும்மல் மூலம் வெளிப்படும் கிருமிகளை உடைய நீர்த் திவலைகள் படிந்துள்ள பொருட்களை தொடும் பொழுது கைகளில் கிருமிகள் ஒட்டிக்கொள்கின்றன.
- அவ்வாறு கிருமிகள் ஒட்டியுள்ள கைகளைக் கழுவாமல் கண்கள், மூக்கு, வாய் மற்றும் முகத்தைத் தொடும்போது இந்நோய் தொற்று ஏற்படுகிறது(>80%).

## நோய் தடுப்பு நடவடிக்கைகள் :

- அடிக்கடி கைகளை சோப்பு போட்டு நன்கு தேய்த்து கழுவ வேண்டும். ஒவ்வொரு முறையும் கை கழுவ குறைந்தபட்சம் 30 விநாடிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- இருமும் போதும் தும்மும் போதும் முகத்தை கைக்குட்டை கொண்டு மூடிக் கொள்ள வேண்டும்.
- சிகிச்சை தரும் அனைத்து மருத்துவமனைகளிலும் கிருமி நாசினி கொண்டு சுத்தமாக துடைத்து பராமரித்தல் வேண்டும்.
- 3 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 70 வயதிற்கு மேற்பட்டவர்கள் பொது இடங்கள் மற்றும் கூட்ட நெரிசல் உள்ள இடங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும்.

## சிகிச்சைகள்

- காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

# உழைத்த..உடனிருந்த...உதவிய....
# நல் உள்ளங்களுக்கு நன்றிகள்...

Caritas INDIA
*The Joy of Service...*

caritas Germany

KOLPING INDIA

Caritas Japan

香港明愛 Caritas HONG KONG

#MISSIONOXYGEN HELPING INDIA BREATHE AGAIN

The Little Way Association

TOWARDS THE KINGDOM TOGETHER WITH THE TARGET PEOPLE
DIOCESE OF CHINGLEPUT 2002 Tamilnadu South India

TAMILNADU SOCIAL SERVICE SOCIETY TASOSS

BARMHERZIGE SCHWESTERN VOM HEILIGEN KREUZ INGENBOHL

CRDS


**Chengalpattu Rural Development Society - CRDS**
No: 199A/4, Behind RC Cemetary, Thimmavaram
Kanchi High Road, Chengapattu Dt., - 603 101
Tamil Nadu, India

+91 9445586020
+91 6379493429

crdskanchigmail.com
crdschengai@rediffmail.com
www.crds.net.in

crds chengai | crdskanchi | Chengalpattururaldevelopment socity | CRDS DSSS | +919361131604